# 1

அந்த அழைப்பும் அந்தச் செய்தியும் விஜயனுக்கு ஒரே நேரத்தில் வந்து சேர்ந்தன. அப்போது அவன் தொலைக் காட்சி நிலையத்தின் ஹைபேண்ட் வீடியோ எடிட்டிங் அறையில் இருந்தான். தேவராட்டக் கலைஞர் குமாரராமன் ஒரு வெளிநாட்டுப் பெண்ணுக்கு ஆட்ட அசைவுகளைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்தப் பெண் முயற்சி செய்து பார்த்து விட்டுச் சரியாக வரவில்லை என்பதால், வெட்கப்பட்டுப் புன்னகைத்த இடத்தில் ஷாட்டை வெட்டும்படி எடிட்டர் சந்தோஷிடம் சொன்னான் விஜயன். அப்போதுதான் கடைநிலை ஊழியன் ஹரி அறைக்கு வந்தான்.

''என்ன, திரும்பவும் விஜூ சாருக்கு டி.ஜி., போன் பண் ணிட்டாரா...?'' என்றான் சந்தோஷ்.

''அதுமட்டுமல்ல...விஜூ சாரோட ஊர்ல குண்டு வெடிச் சிருக்கு!''என்றான் ஹரி.

விஜயன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

''தமிழ்நாட்டிலா.!? எந்த ஊர்ல ஹரி?''

''சென்னைக்குப் பக்கத்துல... எனக்குப் பேர் சரியா சொல்ல வரல...''

விஜயன் எழுந்து சந்தோஷிடம், ''இதுக்கு அடுத்து மு.ராமசாமி பேசறது வரணும். மூணாவது டேப் ஆரம்பத்துல இருக்கு. போட்டு வெச்சுடு. அப்புறமா வரேன்...'' என்றபடி வெளியேறினான்.

நிலையத்தின் நீண்ட வராந்தாவில் நடக்கும் போது, எதிரே வந்தவர்களுக்கு பதில் சிரிப்பை வழங்கும் மனநிலையில் விஜயன் இல்லை. 'தமிழ்நாட்டில் குண்டு வெடிப்பா...?' என்ற கவலையே தலையை ஆக்கிரமித்திருந்தது. முதலில் செய்தி ஆசிரியர் அறைக்குப் போய் விசாரிக்க வேண்டும். பிறகு டி.ஜியைப் பார்த்துக் கொள்ளலாம். டி.ஜி என்கிற டைரக்டர் ஜெனரல் அழைப்பதென்பது நிலையத்தின் வேறு ஊழியர்களுக்கு வேண்டுமானால் அபூர்வமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கலாம். விஜயனுக்குப் பழகிப் போய்விட்டது. பல நேரங்களில் வெட்டி அரட்டைக்காகக் கூப்பிடுவார்.



அரசாங்க உத்தியோக அடுக்குகளின்படி விஜயனின் புரோக்ராம் எக்ஸிகியூட்டிவ் பதவி டி.ஜியிலிருந்து பல அடுக்குகள் கீழே இருந்த போதும் விஜயன், நிலையத்தின் செல்லப்பிள்ளை. நிலையத்துக்கு மட்டுமல்ல... நேயர்களுக்கும்தான். ஞாயிறு காலை எட்டு மணி என்றால், எல்லா நகரங்களிலும் டி.வி. பெட்டி முன்னால் விஜயனுக்காகக் காத்திருப்பார்கள். நேயர்களின் கேள்விகளுக்கு அசடு வழியாமல், அதே சமயம் நகைச்சுவை உணர்வோடு புத்திசாலித்தனமாகப் பதிலளிப்பது விஜயனின் தனித்திறமை.

ஆங்கில நிகழ்ச்சி என்றாலும் ஆங்காங்கே தமிழ், இந்தி, மலையாளம், மராத்தி என்று ஓரிரு வாக்கியங்களைக் கலப்பதும் விஜயனுக்கு ரசிகர்களைத் தேடித் தந்திருந்தது.

அசாமிலிருந்து ஒரு நேயர் கேட்டதற்காக, ஒரு முறை விஜயன் அசாமிய மொழி தெரிந்த ஆளைத் தேடிப் பிடித்து, சில வாக்கியங்களை எழுதி வாங்கி, மனப்பாடம் செய்து நிகழ்ச்சியில் பேசினான். இந்த மாதிரி ஏதாவது செய்து பார்க்கிற சுவாரசியம் தான் அவனையும் தொடர்ந்து இரண்டு வருடங்களாக நேயர் கேள்விகள் நிகழ்ச்சியில் பங்கேற்க வைத்திருக்கிறது.

இந்தியாவில் விஜயன் போய் கொஞ்சநாளாவது வேலை செய்யாத டி.வி. நிலையமே இல்லை. யாராவது போக விரும்பாவிட்டால், நான் அங்கே போகிறேனே என்று ஆர்டரைக் கேட்டு வாங்கிக் கொண்டு போய்விடுவான். கல்யாணம் ஆகவில்லை.

விஜயனிடம் நேயர்கள் உட்பட யாரும் எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் வந்துவிடும். ‘ஏன் கல்யாணம் செய்யவில்லை...? எப்போது கல்யாணம்...?’ என்ற கேள்விகளுக்கு மட்டும் ஒரு பதிலும் வராது! அவனுடைய பிரபலமான புன்னகையைப் பதிலாக வழங்கிவிட்டு, அடுத்த விஷயத்துக்குப் போய் விடுவான். அந்தக் கேள்விகளுக்கான பதில் அவனுக்கே தெரியாது. ஆனால், அவனுக்குள்ளேயும் அந்தக் கேள்விகள் எப்போதாவது தலைதூக்கும். சில அபூர்வ தருணங்களில், இரவு பதினொரு மணிக்கு டேப்பிலிருந்து ஒலிக்கும் கிஷோரி அமோன்க்கரின் சுண்டியிழுக்கிற குரலை மட்டுமே துணையாகக் கொண்டு படுத்திருக்கிற வேளைகளில்... அலுவலக வேலையாக இட்டார்சியிலிருந்து ஜபல்பூர் மாதிரி இடங்களுக்குத் தனியே பகல்நேர ரயிலில் ஜன்னலோரப் பயணத்தில் இயற்கையில் அமிழ்ந்து போகிற வேளைகளில்...எதைத் தேடி யாருக்காக இப்படி ஓடிக்கொண்டே இருக்கிறேன் என்று தன்னையே கேட்டுக் கொள்வான். அடுத்த வேலையில் ஆழ்ந்தவுடன் கேள்விகள், கம்ப்யூட்டர் திரையில் அடுத்த ஃபைலை அழைத்ததும் முந்திய ஃபைலின் முகம் பின்னே ஒளிந்து கொள்வது போல் ஒளிந்து கொள்ளும்.

செய்தி ஆசிரியர் அறைக்குள் நுழைந்தான் விஜயன்.

அவன் கேட்பதற்கு முன்பாகவே, கே.கே.சர்தேசாய் கற்றையாக வைத்திருந்த பி.டி.ஐ., யு.என்.ஐ. செய்திக் குறிப்புகளை நீட்டினார்.

வாங்கி வேகமாகப் புரட்டினான் விஜயன்.

சென்னைக்கு ஐம்பத்தாறு கிலோ மீட்டர் அருகிலுள்ள செங்கல்பட்டில்...

*'செங்கல்பட்டிலா...!? விஜயனுக்கு ஒரு நொடி தூக்கிவாரிப் போட்டது. அவனுடைய ஊர். பிறந்து வளர்ந்து படித்து ஆளான ஊர்.*

*''கே.கே.! இது என் நேட்டிவ் பிளேஸ்...'*

*''அச்சா!'' என்றார் சர்தேசாய் தன்னிச்சையாக.*

*ஆறு இடங்களில் ஒரே நேரத்தில் குண்டுகள் வெடித்தன. நகரின் மையப்பகுதியான கிளாக் டவர் பகுதியில் குண்டு வெடித்ததில் எட்டுப் பேர் செத்தார்கள். மூன்று குதிரைகள் செத்தன.*

*''உன் டவுன்ல குதிரையெல்லாம் இருக்குதா, என்ன...?''*

*மணிக்கூண்டு அருகே குதிரை வண்டி ஸ்டாண்ட். சென்னையில் குதிரை வண்டிகளை விஜயன் அண்மைக் காலத்தில் பார்த்ததில்லை. செங்கல்பட்டில் இன்னுமா இருக்கின்றன...? அவன் கடைசியாகக் குதிரை வண்டியில் போனது, அப்பா இறந்த போதுதான். மார்ச்சுவரியிலிருந்து பிணத்தை வீட்டுக்கு எடுத்துச் சென்ற குதிரை வண்டியில் கூட உட்கார்ந்து போனான். அது தான் செங்கல்பட்டுக்குக் கடைசியாகப் போனது. பன்னிரெண்டு வருடங்களாகிவிட்டன. அந்தக் குதிரையும் இப்போது செத்திருக்குமோ...?*

*மணிக்கூண்டு அருகேதான் அவன் படித்த ஆரம்பப் பள்ளிக்கூடம். தென்னை மர ஸ்கூல் என்பார்கள். அவன் படித்த காலத்திலேயே தென்னை மரம் இருக்கவில்லை. அதற்கும் முன்பு எப்போதோ இருந்திருக்கும்.*

*குண்டு வெடித்தபோது பள்ளிக் குழந்தைகள் எங்கே இருந்திருப்பார்கள்...? மாலையில் நடக்கப்போகும் ஆண்டு விழாவுக்காகப் பகலில் விடுமுறை விட்டிருந்தார்கள். எனவே வெடி விபத்தில் குழந்தைகள் பாதிக்கப்படவில்லை என்றது யு.என்.ஐ. செய்தி. விஜயனுக்கு, தான் ஒரு ஆண்டுவிழாவில் பாரதியார் வேடம் போட்டு, தலைப்பாகை கீழே விழுந்தது நினைவுக்கு வந்தது.*

*சர்தேசாய் மேஜையில் டெலிபோன் மணி அடித்தது. எடுத்துப் பேசினார்.*

*''விஜூ... உனக்குத்தான்...டி.ஜி!''*

*அவன் நடமாட்டத்தைத் தெரிந்து கொண்டு துரத்திப் பிடித்து அழைக்கிறார் என்றால், நிச்சயம் அரட்டைக்காக இருக்காது.*

*''சார்.....விஜூ...''*

*''எவ்வளவு நேரமாக உன்னைத் தேடுவது...? இனிமேல் உன்னை புரொடக்ஷன் செய்யவே அனுமதிக்கப் போவதில்லை.*

எப்போது பார்த்தாலும் ஷூட்டிங், எடிட்டிங் என்று காணாமல் போய்விடுகிறாய். உடனே வா...!'' என்றார் டி.ஜி.கிருஷ்ணமூர்த்தி.

புரொடக்ஷன் செய்யாமல் இருப்பதாவது... தொடர்ந்து நிகழ்ச்சிகளை தயாரிக்க அனுமதித்தால்தான், பதவி உயர்வையே ஏற்றுக்கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்த அபூர்வமான டி.வி. புரொடியூசர் விஜயன். ஆறுமாதத்துக்கு ஒரு முறையாவது தமிழில் ஒரு அரைமணி நேரத் தயாரிப்பு செய்யாவிட்டால் பைத்தியம் பிடித்தாற் போலாகி விடும் அவனுக்கு.

கடைசியாக ரசிகர் மன்றங்கள் பற்றி ஒரு நிகழ்ச்சி செய்தான். இப்போது தேவராட்டம். இரண்டுக்கும் ஊற்றுக்கண் மதுரைதான் என்பதுதான் விஜயனுக்கு சுவாரசியமான ஆராய்ச்சி.

அடுத்த சில நிமிடங்களில் டி.ஜி முன்னால் உட்கார்ந்திருந்தான் விஜயன்.

டி.ஜி.கிருஷ்ணமூர்த்தி, எந்த ஆட்சி மாற்றத்திலும் பாதிக்கப்படாத அபூர்வமான அரசாங்க அதிகாரி! எல்லா கட்சிகளிலும் அவருக்கு நண்பர்கள் உண்டு. அரசியல் மாற்றங்கள் எந்தத்திசையில் நடக்கின்றன என்பது பற்றிய தன் அனுமானங்களை உரசிப் பார்த்துக் கொள்ள, விஜயன் அவருக்கு ஓர் உரைகல். சில நேரங்களில் அவனுக்கும் அவரிடமிருந்து சில முன்னெச்சரிக்கைக் குறிப்புகள் கிட்டுவதுண்டு.

இன்று வழக்கமான அரட்டை எதுவுமில்லை. ஆரம்பப் புன்னகைக்குப் பிறகு, நேரே விஷயத்துக்கு வந்தார். ''விஜூ உனக்கு ஒரு முக்கியமான பொறுப்பு வரப்போகிறது. ஹோம் மினிஸ்ட்ரியிலிருந்து உன்னுடைய சர்வீஸ் ஃபைலைக் கேட்டிருந்தார்கள். பார்த்து விட்டு, ஹோம் செக்ரெட்டரி பேசினார். நீயும் அவரோடு இப்போது பேசு. உன்னைத் தேரந்தெடுத்திருக்கிறார்கள்''.

“எதற்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்...?”

''அதெல்லாம் எனக்குத் தெரியாது... தெரிந்தாலும் சொல்ல மாட்டேன். நீயே நேரில் போய்த் தெரிந்துகொள்.''

தன் ஐடென்டிடி கார்டைக் காட்டியபடி, ஏராளமான ஏ.கே.47-களைக் கடந்து உள்துறைச் செயலாளரின் அறையை விஜயன் அடைந்த போது... அவருடைய பி.ஏ., அவனை கான்ஃபரன்ஸ் அறைக்கு வழி நடத்தினார். அந்த அறைக்கு விஜயன் வருவது அதுதான் முதல் முறை. அங்கே அவனுக்காக ஒரு மாநாடே காத்திருந்தது. பத்துப் பதினைந்து உள்துறை, உளவுத்துறை அதிகாரிகளின் கைகள் விஜயனுடன் கைகுலுக்கின. ஒரு

சில முகங்கள் தெரிந்த முகங்களாக இருந்தன. எல்லோரும் அமைச்சருக்காகக் காத்திருந்தார்கள்.

அந்த கான்ஃபரன்ஸ் அறையில், ஒரு சுவரில் சம்பிரதாயமான காந்தி, குடியரசுத் தலைவர், பிரதமர் படங்கள் தொங்கின.

எதிர்ச் சுவரில் தனியே, ஒரு ஒற்றை பெயிண்டிங் தொங்கியது. காத்திருந்த நேரத்தில், விஜயன் அந்தப் படத்தை அருகே போய்ப் பார்த்தான். வெள்ளைப் பின்னணியில் ஒரு சில பட்டையான கோடுகளில் ஒரு பெண்ணின் தோற்றம். மார்பகங்கள் இருக்க வேண்டிய இடத்தில் மொத்தமாக ஒரு பெரிய சிவப்பு வட்டம். அதன் உள்ளே சின்னதான இன்னொரு சிவப்பு வட்டம். இதற்கு என்ன அர்த்தம்...? விஜயனுக்கு அது துப்பாக்கி சுடுகிறவர்களின் டார்கெட் ப்ராக்டீஸுக்காக மாட்டப்படுகிற புல்ஸ் ஐ மாதிரி தோன்றியது! 'எதற்காக அந்தப் பெண்ணைச் சுட வேண்டும்...?' படம் வரைந்ததும் ஒரு பெண்தான் –சஜிதா என்று போட்டிருக்கிறது. அவளை என்றாவது சந்தித்தால் காரணம் கேட்க வேண்டும். அவளை எங்கே நான் சந்திக்கப் போகிறேன்...?

செயலாளர் உள்ளே நுழைந்தார். பின்னாலேயே வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டையில் கறுப்புப் பூனைகள் சூழ அமைச்சர் வந்து சேர்ந்தார். அதிகாரிகள் எல்லோரையும் ஒவ்வொருவராக இந்தியில் நலம் விசாரித்தார். விஜயனிடம் தமிழில்!

செயலாளர் சக்சேனா, ''தென்னிந்தியாவில் புதிதாகத் தொடங்கியிருக்கிற ஒரு சிக்கலைப் பற்றிப் பேசப்போகிறோம்...'' என்று முன்னுரையுடன் கூட்டத்தைக் தொடங்கினார்.

''தற்போது சென்னை அருகே குண்டுகள் வெடித்து இருப்பது புதிய தீவிரவாதக் குழுவான 'தவிப்பு'... குழுவின் முழுப்பெயர் 'தமில்நாட்' விடுதலைப் புராட்சியாலர் குலு''... சக்சேனா. ''தவிப்பு என்றால் என்ன பொருள்...?'' என்று கேட்டார் இணைச் செயலாளர் ஷ்யாம் முகர்ஜி. ஆக்ஸ்போர்டில் படித்தவரான அமைச்சர், ஆறேழு வார்த்தைகளைச் சொல்லிப் பார்த்துத் தானே நிராகரித்தார்.

''இந்தச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமானது 'அர்ஜ்!''' என்றான் விஜயன்.

''அப்படியானால் நமது பதில் நடவடிக்கைக்கு 'ஆபரேஷன் பர்ஜ்' என்று பெயர் சூட்டிக் கொள்ளலாம்''... என்று அமைச்சர் வார்த்தை ஜாலம் செய்ததும் கூட்டத்தில் இறுக்கம் சற்று தளர்ந்தது.

சக்சேனா தொடர்ந்து அரசாங்கம் எடுக்கப்போகும் முயற்சிகள் பற்றிச் சொன்னார். அங்குள்ள ஒவ்வொரு அதிகாரிக்கும்

என்னென்ன பொறுப்பு என்று விவரித்தார். விஜயனின் முறை வந்தது.

''தனித் தமிழ்நாடு கேட்கிறவர்ளைப் பற்றிய எந்தச் செய்தி டி.வி. யிலும் ரேடியாவிலும் வெளியாவதாக இருந்தாலும் அதை முன்னதாகக் கவனித்து 'க்ளியர்' செய்வது உங்கள் பொறுப்பு. எல்லா கேந்திரங்களிலும் உள்ள செய்தி ஆசியர்களுக்கும் கைட்லைன்ஸ் அனுப்பப்படும். சந்தேகம் வந்தால், எந்த நேரமானாலும் உங்களோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்று உத்தரவு. நாம் எப்படிப்பட்ட செய்திகளை அனுமதிக்கலாம் என்பதை, இனி தினசரி காலையில் நடக்கப்போகும் கூட்டத்தில் அவ்வப்போது முடிவு செய்து கொள்ளலாம்!'' என்றார் சக்சேனா

அமைச்சர் குறுக்கிட்டார்.

''இதற்கு முன்பெல்லாம் நிறைய குளறுபடி செய்து விட்டார்கள். பஞ்சாப், காஷ்மீர், சிலோன் விவகாரங்களில் ஒரு சீரான அணுகுமுறை நியூஸ் ரூமில் இருக்கவில்லை. போராளி என்பதா? தீவிரவாதி என்பதா? பயங்கரவாதி என்பதா? என்றே தெரியாமல் குழம்புகிறார்கள். அதனால்தான் இந்த ஒருங்கிணைப்புக் குழுவில் இந்த முறை தகவல் தொடர்பு நன்றாகத் தெரிந்த ஒருவரை டி.வி.யிலிருந்தே போடச் சொன்னேன். பி.ஜ.பி. ஆசாமிகளுக்கு விவரம் போதாது. நீங்கள் இதற்குப் பொருத்தமானவர் மிஸ்டர் விஜயன்...'' என்றார் அமைச்சர்.

கூட்டம் முடிந்து கலையும் போது, விஜயனுக்கு அருகே வந்த அமைச்சர், அவன் தோளில் கையைப் போட்டபடி, 'கடைசியாக எப்போது சென்னைக்குப் போனாய்?'' என்று விசாரித்தார்.

''அய்யாவும் அம்மாவும் என்ன சொல்றாங்க?'' என்று அவர் கேஷுவலாக அரசியல் பற்றிக் கேட்கத் தொடங்கியதும் ஜாக்கிரதையாக பதில் சொல்லாமல் தவிர்த்தான் விஜயன்.

செயலாளர் சக்சேனாவும் உளவுத் துறைத் தலைவர் கோவிந்தும் விஜயனைத் தனியே கூப்பிட்டார்கள்.

''இன்டெலிஜன்ஸ் திரட்டிய தகவல்களின்படி, இந்த ஏழெட்டு பேர்தான் 'தவிப்பு' அமைப்பின் கோர் குரூப். ஓர் ஐடியாவுக்காகப் புரட்டிப் பாருங்கள்'' என்று ஒரு கோப்பை விஜயனிடம் நீட்டினார் சக்சேனா.

புரட்டினான்.

குமாரசாமி, மூர்த்தி, தமிழ்வேள், ஹமீது, ராஜன், ஜோ என்று வரிசையாக விதவிதமான தமிழ் இளைஞர்கள் பாஸ்போர்ட் சைஸில் சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரின் பயோடேட்டாவும் எம்.ஏ., எம்.எஸ்ஸி., இன்ஜினீயரிங், ஸ்கூல்

டிராப் அவுட், டாக்டரேட் என்று வகைவகையாக இருந்தன!

அடுத்த காகிதத்தைப் புரட்டினான் விஜயன்.

ஆனந்தி!

அதே ஆனந்தியா....?

அதே ஆனந்திதான் என்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் பாஸ்போர்ட் புகைப்படம் விஜயனுக்கு பதில் சொல்லிற்று.

'ஒளிபடைத்த கண்ணினாய் வா...வா...வா...

உறுதி கொண்ட நெஞ்சினாய் வா...வா...வா...!'

என்று தெளிவான குரலில், தீர்க்கமான பார்வையோடு பாடிய அதே முகம்...!அதே ஆனந்தி!

''உங்களுக்கு இவளைத் தெரியுமா...? என்றார் உளவு அதிகாரி கோவிந்த்.

''தெரியும்....'' என்றான் விஜயன்

''அது எங்களுக்கும் தெரியும்!'' என்றார் சக்சேனா.

# 2

விஜயன், அமைச்சகத்திலிருந்து வெளியே வந்து ஸ்கூட்டரை எடுத்தான். ஒவ்வொரு கட்டத்திலும் செக்யூரிட்டி செக். அடையாள அட்டையைக் காட்டியபடியே நடப்பது டெல்லியில் பழகிப் போய்விட்டது. வழியில் பிரஸ் கிளப்பில் எட்டிப் பார்த்தான். பாண்டேக்களும் ஜோஷிகளும் கபூர்களும்தான் இருந்தார்கள். உமாசங்கர், ஸ்ரீதர் யாரையும் காணோம்.

ஒரே ஒரு தமிழ் முகம்தான் இருந்தது. பி.டி.ஐ. கணேசன். ''செங்கல்பட்டில் குண்டு வெடித்தது தெரியுமா?'' என்று கேட்டான் விஜயன். ''ஒழிஞ்சது சனியன். அது ஸ்டுப்பிட்டான ஊர். சிட்டி மாதிரியும் இருக்காது. வில்லேஜாவும் இருக்காது. போனது நல்லதுதான். புதுசா கட்டிக்கலாம்'' என்றான் கணேசன். ''பெரிய கோவில்ல குண்டு வெடிச்சா மட்டும் தான் நீ கவலைப்படுவே?''என்றான் விஜயன். ''என்ன நீ... கருணாநிதி மாதிரி பேசற. தஞ்சாவூர் இல்லாட்டா தமிழ்நாடே இல்ல தெரியுமா?'' என்று ஒரு பெரிய விவாதத்துக்குத் தயாரான கணேசன், 'பீர் சாப்பிடறியா?'' என்றான். மறுத்த விஜயன், டீ